**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)** |

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2 இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பகாப்பதம் என்றால் என்ன?
2. உயர்திணைக்குரிய பால்கள் யாவை?
3. தன்மை பொதுப்பெயர்கள் யாவை?
4. கண்ணன்------- (பெயர்ப்பயனிலை ஆக்குக)
5. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
6. முக்காலத்திற்கும் உரிய வினைச்சொல் எக்காலத்தில் கூறப்பெறும்? சான்று தருக.
7. வினாப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் யாவை?
8. முதனிலைத் தொழிற் பெயர் என்றால் என்ன?
9. நன்னூலில் காட்டப்படாத உரிச்சொல் தொகுதியை எந்நூலில் காணலாம்?
10. உருபு இல்லாத வேற்றுமைகள் யாவை?
11. பாண்டியன் ---------- அழித்தான் (செயப்படுபொருளை அமைத்து எழுதுக.)
12. பண்பு எனப்படுவது யாது?
13. 'மிகுதி' என்னும் பொருளைக் குறிக்கும் உரிச்சொற்களை எழுதுக.
14. பால் வழுவமைதிக்கான காரணங்கள் யாவை?
15. கருங்கதிர் வெம்மை – விளக்குக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டு தருக.
2. மூன்றாம் வேற்றுமை உருபின் சொல் உருபு பற்றி எழுதுக.
3. மூவிடப் பெயர்களின் முக்கியத்துவத்தைச் சான்றுகளுடன் கூறுக.
4. வழுக்கள் எவ்வெவற்றில் ஏற்படுகின்றன? உதாரணம் தருக.
5. தொழில் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுள்ள வேறுபாட்டை எழுதுக.
6. அளவையாகுபெயர்கள் எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக.
7. உரிச்சொல்லின் வகைகளை சான்றுடன் எழுதுக.
8. 'எல்லாம்' என்ற சொல் பொதுப்பெயராவது எங்ஙனம்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) திணை, பால், எண், இடம் பெயர்ச்சொற்களில் இடம் பெற்றுச் சிறப்பதை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துகின்றன என்பதை விளக்கி உரைக்க.

2. (அ) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை வரையறுத்து அதன் வகைகளை சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இடைச்சொல்லின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) வினை வகைகள் குறித்துக் கட்டுரைக்க. தொகை நிலைத் தொடர்களில் பொருள் சிறக்கும் இடம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) வழுநிலை, வழுவமைதி பற்றி இலக்கண நூலார் கருத்துக்களை விளக்கியுரைக்க.

***